

இராணிப்பேட்டை முத்துக்கடையில் தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகளின் நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத், காந்தி மாவட்ட இளைஞர் அணிஅமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., நகர செயலாளர் பி.பூங்காவனம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், நகர மன்ற தலைவர் சுஜாதா வினோத், மாவட்ட பிரதிநிதி எஸ்.கிருஷ்ணன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் இசட். அப்துல்லா, மாவட்ட பிரதிநிதி கோபிகிருஷ்ணன், நகர துணை செயலாளர் ஆனந்தராஜ், நகர பொருளாளர் ஏ.அமித், அம்பிகா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் பி.எல்.டி.சிவா, நகர இளைஞர் அணி அமைப்பாளர் அஜ்மல்பரசுராமன், நகர மாணவரணி பாலாஜி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பி.யுவராஜா, மகி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 29.01.2025 அன்று சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, காணொலி காட்சி வாயிலாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், சிங்கம்புணரி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ள, வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு திறப்பு விழாவில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பங்கேற்று, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி முன்னிலையில் திறந்து வைத்து சிறப்பித்தார். உடன் சிங்கம்புணரி பேரூராட்சி தலைவர் பி.அம்பலமுத்து, சிங்கம்புணரி வட்டாட்சியர் திருமதி எஸ்.பரிமளா, சிங்கம்புணரி பேரூராட்சி துணைத்தலைவர் செந்தில்குமார், 14வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் தாயுமானவன், சிங்கம்புணரி பேரூராட்சி செயல் அலுவலர் சண்முகம் உட்பட பலர் உள்ளனர்.

### மணப்பாறை அருகே

# சாரண - சாரணியருக்கு வழங்கப்படும் உணவை சாப்பிட்டுப் பார்த்து ஆய்வு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறைகளைக் கேட்டறிந்தார்!

திருச்சி, ஜன. 31 -

திருச்சி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் பாரத சாரண - சாரணியர் இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழறி ஞர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடங்கியது. இந்த சாரண - சாரணியர் இயக்க மாணவ - மாணவிகள் பொறுப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் என சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் 7 நாட்கள் அதே பகுதியில் தங்குகின்றனர். இதில் சாரண சாரணிய இயக்கத்தை சேர்ந்தவர்களின் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றது. இதற்காக தமிழகம் மட்டுமல்லாது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் மாணவ- மாணவிகள் வந்துள்ளனர். அவர்களுக்காக அந்த மாநிலத்திற்கு தகுந்த உணவுகள், அவரவர் விருப்பம் போல் வழங்கப்பட்டு வருகின்றது.

இதையடுத்து நேற்று காலை தமிழ்நாடு பாரத சாரண - சாரணியர் இயக்க தலைவரும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யமொழி நிகழ்ச்சி நடைபெறும் பகுதிக்கு வருகை தந்தார். அப்போது ஒவ்வொரு மாநில உணவு தயாரிக்கும் பகுதிக்கு சென்று உணவு சுத்தமான, சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுகின்றதா என்பதை இஞ்ச் முதல் இஞ்சாக ஆய்வு செய்தார். உணவில் பயன்படுத்தப்படும் பொருட்களின் தரத்தையும் பார்வையிட்டார். அதன் பின்பு பணியாளர்கள் உள்ளிட்டோர் சாப்பிடும் இடத்திற்கு சென்று அங்கு முதலில் மாணவ- மாணவிகள் சேர்ந்து பொங்கல் சாப்பிட்டார். தொடர்ந்து பல்வேறு மாநிலத்தை சேர்ந்த சாரண - சாரணியர் உள்ள பகுதிக்கு சென்று அங்கு உள்ள உணவையும் சாப்பிட்டு பார்த்த பின் உணவின் சுவை மற்றும் தரம் குறித்து அந்த மாணவ - மாணவிகள் மற்றும் பொறுப்பாளர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டார். மேலும் குறை ஏதேனும் இருந்தாலோ என்ன தேவை என்றாலோ 24 மணி நேரமும் அதற்கான பொறுப்பாளர்கள் இருப்பார்கள் அவர்களிடம் சொன்னால் உடனே நிவர்த்தி செய்யப்படும் என்றும் கூறினார். இது மட்டுமின்றி தமிழக முதல்வர் இந்த நிகழ்வை தொடர்ந்து கண்காணித்து வருகிறார் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் சாப்பிடுவதில் தொடங்கி எங்கு சென்றாலும் எல்லா மாநில சாரண - சாரணியர் இயக்கத்தை சேர்ந்த மாணவ - மாணவிகள் பொறுப்பாளர்கள், தூய்மைப்பணி யாளர் என அனைவரும் ஒன்று சேர்ந்து போட்டி போட்டுக் கொண்டு செல்பி எடுத்து மகிழ்ந்தனர். அனைவரிடமும் அன்பு காட்டி, அக்கறையுடன் பேசிய அமைச்சர் சிறுமி ஒருவரை தன் அருகில் நிறுத்தி புகைப்படம் எடுத்து கொண்டார்.

இதைத் தொடர்ந்து அங்குள்ள வளாகத்தில் ஒவ்வொரு மாநிலத்தை சேர்ந்தவர்களின் நிகழ்ச்சி கள் நடைபெற்றது. இதில் கேரள மாநில மாணவ - மாணவிகள் பேண்டு வாத்தியம் அனைவரின் கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது.

காலையில் தொடங்கி இரவு வரை 7 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ள நிலையில் 3 ம் தேதியுடன் இந்த விழா நிறைவு பெறுகின்றது.

# புதுவயலில் ரூ.2.40 கோடியில் புதிய வாரச்சந்தை திறப்பு!

## சுப.சின்ன துரை – முகமதுமீரா – பகுருதீன் பங்கேற்பு!

சிவகங்கை, ஜன. 31 -

கடந்த வாரம் 21, 22 ஆகிய தேதிகளில் இரண்டு நாட்கள் சிவகங்கை மாவட்டத்தில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு புதிய திட்டங் களுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டங்களை துவக்கி வைத்தும் 50 ஆயிரம் மக்களுக்கு நலத்திட்ட உதவி களை வழங்கியும் சிறப்பு உரையாற்றினார்.

அதன்படி சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா புதுவயல் பேரூராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அனைத்து வசதிகளுடன் ரூபாய் 2 கோடியே40 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள 162 கடைகளுடன் கூடிய புதிய வார சந்தையினை காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார் .

இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று அனைத்து வசதிகளுடன் புதிய வாரச்சந்தை அமைத்து கொடுத்த முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும்,

இதற்கு பரிந்துரை செய்த கூட்டுறவு துறை அமைச்சர் கே. ஆர். பெரிய கருப்பன், நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே. என். நேரு, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோருக்கு புதுவயல் பேரூர்கழகம் பேருராட்சி மற்றும் வியாபாரிகள் சார்பில் நன்றியை தெரிவித்திடும் வகையில் நேற்று முன்தினம் வாரச்சந்தையில் அன்னதானம் வழங்கப்பட்டது.

சாக்கோட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் சுப. சின்னத்திரை தலைமையில் பேரூராட்சி மன்ற தலைவர் ஹாஜி முகமது மீரா, பேரூராட்சி மன்ற துணைத் தலைவரும் பேரூர்கழக செயலாளருமான பகுருதீன் அலிபாய் முன்னிலையில் 3000 த்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த அன்னதானம் புதுவயல் பேரூர் கழகம் மற்றும் பேரூராட்சி தலைவர் துணைத் தலைவர் சந்தை வியாபாரிகள் சார்பில் பொதுமக்களுக்கு வழங்கப் பட்டது .

இந்த நிகழ்ச்சியில் பேரூர் கழக நிர்வாகிகள் அப்துல் ரகுமான், மாணிக்கம், முருகேசன், குணசேகரன், உமா மகேஸ்வரி, சங்கர் சாமி, எம். சாகுல் ஹமீது, மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்ஆராயி, வாசுகி முத்துராமலிங்கம், சரண்யா சுந்தர், பூர்ணிமா சுரேஸ், உஷாமருது, நாச்சியப்பன், ரேவதி சிவக்குமார் மற்றும் சந்தை வியாபாரிகள் கலந்து கொண்டார்கள்.

### திருவள்ளூர் மேற்கு மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவள்ளூர் மேற்கு மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்டங்களில் தலா ஒரு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

திருவள்ளூர் மேற்கு மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்டங்களில் **தலா ஒரு பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, **பிப்ரவரி 4 (செவ்வாய்க்கிழமை) அன்று ரூ.25000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்**.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்தந்த மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்/ஒன்றிய/நகர/பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 30.01.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நேற்று (30.01.2025) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பேரறிஞர் அண்ணா 56வது ஆண்டு நினைவு நாள்!

# அறந்தாங்கியில் அமைதிப் பேரணி - அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!



புதுக்கோட்டை, ஜன . 31 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சி தந்த காவிய தலைவர். உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாளெல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்க்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளினையொட்டி வருகின்ற 3.2.2025 - திங்கள்கிழமை காலை 9 மணியளவில் அறந்தாங்கி புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று பேரறிஞர் அண்ணா சிலைக்கு எனது (எஸ். ரகுபதி) தலைமையிலும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் முன்னிலையிலும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அறந்தாங்கி நகர தி.மு.க. செயலாளர் க.ராஜேந்திரன் செய்துள்ளார்.

### சாலவாக்கம் ஒன்றிய துணைச் செயலாளர் நினைவில் வாழும் து.தமிழ்வேந்தன் –

# ஊராட்சி மன்றத் தலைவர் அமுதா இல்ல மணவிழா!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது!

காஞ்சிபுரம், ஜன: 31

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றியக் கழக துணைச் செயலாளர் மறைந்த து. தமிழ்வேந்தன் இல்லத் திருமணம் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் இன்று நடைபெறுகிறது.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றியக் கழக துணைச் செயலாளர் நினைவில் வாழும் து.தமிழ்வேந்தன் - தோட்டநாவல் ஊராட்சி மன்றத் தலைவர் அமுதா தமிழ்வேந்தன் ஆகியோரது புதல்வர் டி.கோகுலகண்ணன் - திருவந்தவார் கிராமம் பி.ராஜேஷ் –கிரேஸ் மேரி ஆகியோரது மகள் ஆர்.சுமேதா ஆகியோரது திருமணம் இன்று (31.1.2025 - காலை 8.30 மணி அளவில், உத்திரமேரூர் - மல்லியங்கரனை ரோடு , மீனாட்சி பாலிடெக்னிக் அருகில் உள்ள பிரியா மகாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் க.செல்வம் எம்.பி., ஆகியோர் மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் சாலவாக்கம் ஒன்றிய செயலாளர் டி. குமார், உத்திரமேரூர் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன், ஒன்றியச் செயலாளர்கள் பி.எச்.சத்தியசாய், கே.கண்ணன், ஜி.தம்பு, பி.சேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா. நாகன், என்.எஸ்.பாரிவள்ளல்,

வாலாஜாபாத் என். பாண்டியன், பி.சசிகுமார், இல்லாமல்லி ஶ்ரீதர், ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா ஞானசேகரன், துணைத் தலைவர் வசந்தி குமார், கு.துரைவேலு, ஜி.சிவராமன், எஸ்.ஆர். வெங்கடேசன், எஸ்.அர். வெங்கடேசன்,

அணி நிர்வாகிகள் என். ரவி, ஜி.சத்தியமூர்த்தி, பெ.மணி, பா.கார்த்தி கேயன், எடமச்சி எஸ்.முரளிதரன், எஸ்.ரத்தினமாலா, என்.எஸ்.ரவி, வி.ஞானசேகர், ஜெ.சுஜாதா, பி.வி.பாலமுருகன், ஆர்.வெங்கடசுப்பிரமணி, வி.பாண்டியன், இ.பாபுஷிரீப், கே.வெங்கட்ராமன், சு.பலராமன், எஸ்.விஷ்ணு, பி.வி. அழகப்பன், இ.நந்தா, மாசிலாகோபி, ஏ.தர்மராஜ், பு.வெ.ஜெயபுரி, கே.கன்னியப்பன், எஸ். லோகநாயகி, எம்.மணிகண்டன், சத்யா, அருண்பிரசாத், வினோத், அரவிந்த், அஜய், சந்தோஷ், வீரபாண்டியன், நாகராஜ்

ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜி.நதியாகோபி, பி.சுப்ரமணி, ஆர்.சந்திரா, பு.அன்புராஜ், ஆர். கல்யாணசுந்தரம், பவுன்சின்ராஜ், தீபாகாமராஜ், பி. சேகர்,

ஊராட்சி மன்றத் தலைவர்கள் கோமளாஅய்யப்பன், கோதண்டராமன், சத்தியாசக்திவேல், டி.சுந்தரமூர்த்தி, நாகம்மாள் மாரி, சுப்பம்மாள், தம்பிபெருமாள், பாலு, தேன்மொழி, கார்த்திகேயன், சுஜாதாஜெயராமன், ஜெயகாந்திமுரளி, பொன்மொழி சுபாஷ், பூங்கோதை சேட்டு, மஞ்சுளா முருகன், சுதாலட்சுமி செல்வகுமார், வெங்கட்ராமன், வெங்கடேசன், பி.சுப்பிரமணி, இந்திராமோகன், வீ.ராமச்சந்திரன், ச. பிருந்தாவதி, கலைச்செல்வி, கோதண்டராமன், எழிலரசி மூர்த்தி,

வீராசாமி, வார்டு உறுப்பினர்கள் கலைச்செல்விமதி, சூர்யகலா ஜெயக்குமார், ஜெயக்குமார், ஜோதிவையாபுரி, முனியம்மாள்ரகு, சதீஷ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

### சென்னை தென் மேற்கு மாவட்ட கழக

# இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்ட கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (31.01.2025) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் எனது தலைமையில் பகுதிச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர், பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

பொருள்: தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி குறித்து

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை தென்மேற்கு தி.மு.க.

### மின் கழக தொ.மு.ச. முன்னாள் பொதுச் செயலாளர்

# சிங்கார ரத்தின சபாபதி மனைவி பிரேமா மணி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை,ஜன.31-



முன்னாள் கழக தொழிலாளர் அனி செயலாளர் முன்னாள் தமிழ்நாடு மின் கழக தொமுச மாநில பொதுச் செயலாளர் சிங்கார ரத்தின சபாபதி அவர்களின் மனைவி திருமதி பிரேமாமணி அவர்கள் நேற்று 30.1.2025 பகல் 12 மணியளவில் உடல் நலக் குறைவு காரணமாக மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அவரது இறுதி சடங்குகள் 31.1.2025 பகல் 2 மணியளவில் அவரது இல்லம் அமைந்துள்ள எண். பி.60, 6 வது மெயின் ரோடு அண்ணா நகர் சென்னை என்ற முகவரியில் நடைபெற உள்ளது என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



மறைந்த முன்னாள் கழக தொழிலாளர் அனி செயலாளர், முன்னாள் தொ.மு.ச. பொதுச் செயலாளர் சிங்கார ரத்தின சபாபதி அவர்களின் மனைவி திருமதி பிரேமாமணி அவர்களின் மறைவு செய்தி அறிந்து தமிழ் நாடு மின் கழக தொ.மு.ச. மாநில தலைவர் கே.சசிகுமார், மாநில துணை தலைவர் க.செல்வராஜ் மற்றும் சென்னை வடக்கு திட்ட நிர்வாகிகள் மறைந்த திருமதி பிரேமாமனி அவர்களின் உடலுக்கு மாலை அணிவித்து அவரது மகன் ஆர்.செந்தில்நாதன் மற்றும் அவரது குடும்பத்தினர்க்கு ஆறுதல் தெரிவித்தனர்.